**செய்தி வெளியீடு எண்: 667** **நாள்: 01.10.2019**

## <u>செய்தி வெளியீடு</u>

## <u>கள்ளச்சாராய ஒழிப்புப் பணியில் சிறப்பாக செயல்பட்ட ஐந்து காவல்துறை அதிகாரிகளுக்கு காந்தியடிகள் காவல் விருது</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, (i) திரு.எஸ்.சந்திரமோகன், காவல் ஆய்வாளர், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு, திருப்பூர் மாநகரம், (ii) திரு.தே. ராஜசேகரன், காவல் ஆய்வாளர், மத்திய புலனாய்வுப் பிரிவு, திருச்சிராப்பள்ளி மண்டலம், (iii) திருமதி.த.பூங்கோதை, பெண் காவல் ஆய்வாளர், பண்ருட்டி காவல் நிலையம், கடலூர் மாவட்டம் (iv) திரு.என்.அழகிரி, காவல் உதவி ஆய்வாளர், மத்திய புலனாய்வுப் பிரிவு, விழுப்புரம் மண்டலம், (v) திரு.அ.பார்த்திபநாதன், தலைமை காவலர் 2864, கும்பகோணம் மேற்கு காவல் நிலையம், தஞ்சாவூர் மாவட்டம் அயல் பணி மத்திய புலனாய்வுப் பிரிவு, திருச்சிராப்பள்ளி மண்டலம் ஆகியோருக்கு, கள்ளச்சாராய ஒழிப்புப் பணியில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியமைக்காக காந்தியடிகள் காவலர் விருது வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன விருது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2020–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26–ஆம் நாள், குடியரசு தினத்தன்று வழங்கப்படும். இவ்விருதுடன், பரிசுத்தொகையாக ரூ.40,000/– ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**